திருவள்ளுவர் ஆண்டு 2040

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 103 பகுதி :4 | ஏப்ரல் - 09 | விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

பொய்மையும் வாய்மை இடத்த ...

கவிஞர் **அ்க்கினி.**

சொன்னாலும் சொன்னாரே செந்நாப் போதர்
பொய்மையும் வாய்மையின் இடத்த தென்று
தன்னாலே முடிந்தமட்டும் எழுத்தா என்தன்
கற்பனையாம் பொய்விரித்தான்; கட்சிக் காரன்
மின்னலென பொய்க்கொள்கை பிரச்சா ரத்தை
மேற்பூச்சில் பொய்யுரைத்தான்; வணிகர் கூட்டம்
தன்னலத்தில் விளம்பரப்பொய் கவர்ச்சி கொள்ளை
மதவாதி ஆன்மீகச் ச(ர)திப்பொய் சொன்னான்;

ஆகமொத்தம் வாழ்க்கையெனும் போரா ட்டத்தில்
அவரவரால் முடிந்தமட்டும் வள்ளு வத்தை
நோகடித்து பொய்மானை கானல் நீரை
சமுதாயம் நொந்தழிய அச்ச மின்றி
வேகமாய் பரப்பமக்கள் நாக ரீக
வித்தப்பொய் மயக்கத்தில் வீழு கின்றார்;
தாகமிகு காகம்நீர் குடித்தாற் போல
பகுத்தறிவின் தாக்கத்தில் மீள்வார் என்றோ?

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 103
பகுதி : 4
ஏப்ரல் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

இதழ்மணம் 3

பெருங்காஞ்சி — மதுரைத் தமிழ்ச்சங்கச் சான்றோர் பெரும்புலவர் இரா.இளங்குமரன் 4

சங்கப் புறப்பாடல்கள் வீரயுகப் பாடல்களா? — முனைவர். க.சின்னப்பா, 12

குறளறிவியல் — முனைவர் மெ.மெய்யப்பன் 27

பாசறைப் புலம்பல் — முனைவர் சோ.முத்தமிழ்ச்செல்வன் 33

"தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழி" — தே.சி.தங்கபாண்டியன் 38

இதழ்மணம்

நலமே விளைக. அரிய ஆய்வுக் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து வருகின்ற பணியில் தொடர்ந்து செயலாற்றிவரும் மதுரைத் தமிழ்ச்சங்கச் சான்றோர், பெரும்புலவர் இரா.இளங்குமரன் அவர்கள், **பெருங்காஞ்சி** என்ற கட்டுரையில் காஞ்சித்திணையின் வகைகளை நுட்பமாக ஆராய்ந்து விளக்கிக் காட்டுகிறார். அதன் வாயிலாகத் தமிழ்மொழியின் நுட்பத்தையும் புலப்படுத்திக் காட்டி, இதழை மெருகேற்றியுள்ளார்.

சங்கப் புறப்பாடல்கள் வீரயுகப்பாடல்களாகத் திகழ்வதை ஆழமாக ஆராய்ந்து வெளிக்காட்டியுள்ளது. **''சங்கப்புறப்பாடல்கள் வீரயுகப்பாடல்களா?''** என்னும் ஆய்வுக்கட்டுரை.

என்றும் நிலைத்த புகழையுடைய திருக்குறளின் தன்மையை **''வான்சிறப்பு''** என்ற அதிகாரத்தை மட்டும் ஆய்வெல்லையாகக் கொண்டு, இயற்கையறிவியலோடு இணைத்து ஆராய்ந்து மனித ஒழுக்கத்திற்கு இயற்கையின் வளமே அடிப்படைக்காரணி என்ற ஆய்வுண்மையை முனைவர் மெ.மெய்யப்பன் வெளிக்காட்டியுள்ளது பாராட்டத்தக்கது.

போர் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் **பாசறையில் புலம்பும் திறத்தைத்** தொகுத்து வகுத்து, சிறப்புற ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள முனைவர் சோ.முத்தமிழ்ச் செல்வனின் கட்டுரை நயமாக உள்ளது.

திரு. தோ.சி.தங்கப்பாண்டியனின், **''தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழி''** என்ற கட்டுரையின் முதற்பகுதி இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

தமிழின் ஆழத்தை வெளிக்கொணரும் வகையில் பழந்தமிழ் இலக்கிய ஆய்வாகத் தொடர்ந்து நம் செந்தமிழ் இதழ் மலர்ந்து மணம்பரப்பி வாசகர்கள் கையில் தவழ்கிறது.

– முனைவர் **க.சின்னப்பா**

பெருங்காஞ்சி

மதுரைத் தமிழ்ச்சங்கச் சான்றோர் பெரும்புலவர்
இரா.இளங்குமரன்

காஞ்சித்திணை தொல்பழந்தமிழர் கண்ட புறத்திணை ஏழினுள் ஆறாவதாகும். தமிழர்தம் போரியல் சீர்மை நெறியேயன்றி மெய்யியல் கோட்பாட்டு முதிர்ச்சியாகவும் திகழ்வது அத்திணையாம்.

"பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே" என்பதாம்.

அத்திணையின் பக்கல் வைக்கத்தக்க தொன்று இல்லாச் சிறப்பினது. அச்சிறப்பும் பல்லாற்ற சிறப்பினது; அது நிலைபேறு இல்லாத உலகியலைப் பொருந்திய வகையால் உரைப்பது என்னும் பொருளது இந்நூற்பா.

முன்னவர் தம் பின்னவர்க்குச் சிறந்தது பயிற்றல் கடமை என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவதும் (1138), சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு என்று முப்பாலார் மொழிவதும் (358) இச்சிறப்பொடு சேர எண்ணத் தக்கவையாம்.

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பவை போலவே காஞ்சி என்பதும் பூவின் பெயரால் பெயர் பெற்றுப் போரொழுக்க விளக்கமாக அமைந்ததாம். காஞ்சி என்பது பலபொருள் ஒரு சொல். மஞ்சள், பொன், அணிகலம், வெண்கலம் எனவும் இவற்றின் விரிவாக்கமாகவும் பொருள் தரும். ஊர்ப்பெயர், பட்டுப்பெயர் என்பவும் பழமையானவையே! இடையொற்றுக் கெட்டுக் 'காசி' யாகி விளங்குவதும் தெளிவு.

காய்ச்சிய பொன்னிறக்கட்டி காய்ச்சுக்கட்டி : காய்ச்சிய பொன் நாணயம் காய்ச்சு அவை காசுக்கட்டி என்றும் காசு என்றும் வழங்கப்படுதல் அறிக.

காய்ஞ்சி என்னும் செஞ்ஞாயிறு, செஞ்சுடர், செந்தீ என்பவற்றை எண்ணிச் "சுடச் சுடரும் பொன்" என்னும் வள்ளுவத்தை ஆய்ந்தால் அழியும் நிலைபேறில்லா உலகில் அழியாப் பேறு அமைந்த வாழ்வியல் சிறப்பை அடையலாம் என்பதை,

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என்னும் புறப்பாடலும் (165),

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

என்னும் வள்ளுவமும் புலப்படுத்தும் (233).

உலகியலில் காணப்படும் பல்வேறு நிலையாமைகளைக் கூறுவது ஒப்பாரி வைத்து அழ அன்று! நிலைபேறில்லாமையை அறிந்து நிலைபேறு அடைதற்குரியவை எவை என்பதைத் தெளிந்து என்றும் அழியா நிலைபேற்று வாழ்வை அடைய வேண்டும்; அவ்வாறு அடைவதே பிறவி நோக்கு என்பதை அறிவுறுத்தும் திணையே காஞ்சித் திணையாம்! சாவும் வாழ்வைச் சாவா வாழ்வு ஆக்கும் வகைகாட்டுதற்கு வாய்த்த திணையே காஞ்சித் திணையாம். அத்திணையின் முதல்துறையே முதன்மைத் துறையாய் – முழுமை விளக்கமாய் அமையும் பெருஞ்காஞ்சித் துறையாம். அதன் இலக்கணம்,

"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை"

என்பது, போரிட்டு வென்றிட இயலாத கூற்றுவனையே அறைகூவி அழைத்து என்னைக் கொல்லவா உன்னால் இயலும்? என்முன் நீ நிற்க ஆற்றாமல் தோற்றுத் தொலைவாய்" என வீறு மொழியும் அழியா வாழ்வுப் பெருமை அதுவாம்.

"நமனை அஞ்சோம்"

அப்பரடிகள் அமரவரி அல்லவோ!

"கூற்றையும் ஆடல் கொண்டேன்"

கம்பன் கண்ட கும்பன் உரை அல்லவோ!

"காலா என் காலருகே வாடா சிறு
புல்லெனவே மதிக்கிறேன்; சுற்றே மிதிக்கிறேன்"

பாரதி வீறு அல்லவோ! இவர்கள் மூவரும் மறைந்தவர்களா? காலமெல்லாம், காலத்தை வென்று நிறைந்தவர்களா?

"காலத்தை வெல்பவர் தாமே,
காலனை வென்றவர்!
சாவாவாழ்வினர் – இறவாப் பெருநிலையர் – எவர்?"

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

எனப்பட்டவர் சாவா வாழ்வினர் அல்லவா! உள்ளார்க்கு இல்லாதாம் நிலை ஏது?

காஞ்சித் திணை முதல்துறை கூறும் பெருமையை அறியாமல்,

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்னும் பெருமை என்ன பெருமை! மங்கல வழக்கு என்னும் பெருமையா? மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை அல்லவா அது! தொல்காப்பியப்புலமை திருக்குறளுக்கு உரைகாண இல்லாது இயலுமா?

நேற்று இருந்தான்; எங்களோடு இருந்தான்; உரையாடி உண்டான்; உலாவினான்; உழைத்தான்! இன்று அவன் இல்லை! எப்படி அவன் ஆனான்?

நேற்று நடந்தது போர்! அமர்! அமர்க்குச் சென்றான்! பலர்க்கு அமரர் பேறு தந்து தானும் அமரன் ஆனான்!

அவன் பீடு – பெயர் எழுதிய கல்! பெருவழியில் நிறுத்தப்பட்ட நடுகல்! பீலி சூட்டி மாலை நாற்றிப்படையல் இட்டுப் போற்றப்பட்ட வாழ்வுக்கு உரியன் ஆனான்! அவன் பெருமையே பெருமை! என்று பேசும் தெய்வநிலை – சாவா – மூவா – நிலைபேற்று நிலையை எய்தினான் என்பதே பெருமையாம்! தொல்காப்பியம் அருளிய பெருமை நிலையை அள்ளிக் கொண்டு துள்ளி வந்து நின்ற பெருமை அஃதாம்!

கதிரோன் வெளிப்பட்டது; அது பட்ட இடமெல்லாம் – பட்ட பொருளெல்லாம் பட்டொளி செய்தன! கதிரோன் தகத்தக எரிவு – தங்கப்பிளம்பு – ஒளி, பட்டொளியாம் பட்டு என்னும் உவண்டுப்பூச்சி! அது நூற்ற எச்சில் நூல், பட்டு! பூச்சி பட்டது; அது தந்த நூல், நூலாடை பட்டொளி செய்தது! களத்தில் ஒருவன் பட்டான் – பட்டொளி செய்பவன் ஆனான்!

புறப்பொருள் வெட்டகமாம் புறநானூறு பெருங்காஞ்சிக்குப் பத்துப் பாடல்களாகக் காட்டுகின்றது. நிலையாமையைக் கூறி நிலைபேற்றைக் காட்டும் அவற்றை அறிதல் இத்துறைக்கு உதவியாம்.

"உலகம் இன்னாதது; இதனை உணர்ந்தவர், இன்பம் காண வழிகாண்பாராக" என்கிறது ஒருபாட்டு (194). இதனைப் பாடியவர் மெய்யியல் மேதகையர் பக்குடுக்கை நன்கணியார்.

"ஓர் இல்லத்திலே இரங்கல்!
ஓர் இல்லத்திலே இனிமை வெள்ளம்!
கூடினோர்க்கு மகிழ்வுப் பெருக்கு!
பிரிந்தோர்க்கு அழுகை ஒழுக்கு!"

இவ்வாறு உலகைப் படைத்தவன் பண்பன் அல்லன்! என்று குமைகிறான் கணி!.

"உலகைப் பொதுவெனக் கொள்ளாமல் தமக்கெனக் கொண்டவர்களுக்கு வாழ்நாள் பெருகினவா? வைத்த வளம் துணை வந்ததா? சிறந்த துணை என்பது நல்வினையே! அத்துணை இல்லார்க்கு எத்துணை உண்டு, உயிர் போகும் காலத்து என்கிறது ஒரு பாட்டு (357). இதனைப் பாடியவர் பெயர் பிரமனார் எனக் காணப்படுகிறது.

"நாடு கொண்டோர் என்ன, காடு செல்லாமலா இருந்தார்?
அக்காடு உனக்கும் வரத்தானே செய்யும்?
வசையும் நிற்கும்; இசையும் நிற்கும்;
ஈகை புரிக! இசைபெறுக! நீடு விளங்குவாய்"

என்கிறது ஒரு பாட்டு (359). பாடியவர் காவிட்டனார் என்பார்.

பயன்மிக்கவை பல செய்து, பாதுகாப்பாக ஆட்சி செய்தவர் சிலர்; அவ்வாறு செய்யார் பலர்; அவர் வாழ்ந்தனரா? இறுதிநாளில் இடுகாட்டில் புல்மேல் வைக்கப்பட்ட பிண்டத்தைத் தானும் உண்டனரா? இதனைக் கண்டும் தெளியாத வாழ்வு என்ன வாழ்வு என்கிறது 360 ஆம் பாட்டு.

முழுதுணர்ந்த அறிவர்க்கும் அருளமைந்த பெருந்தகையர்க்கும் நில்லா உலகத்து நிலைமை சொல்லவேண்டுமோ? இல்லை! அவரே உணர்ந்து போற்றுவர் என்பது அடுத்தபாட்டு (361). பெரிய சுற்றத்துடன் இனி, இல்லில் தங்க இயலாது. உலகம் சிறியது. ஆதலால், இயங்குதற்கு இயலாது எனப் போரிட்டுப் புகழுடலுடன் விண்ணகம் செல்லும் வீரரைக் காண்மின் என்கிறது அடுத்த பாட்டு(362).

"உடை என்னும் முள்மரத்தின் இலை மிகச் சிறிது. அவ்விடம் தானும் பிறர்க்கு இல்லாமல் தாமே ஆண்ட வேந்தர், ஆற்று மணலிலும் பலர். அவர்களும் தம் நாடு பிறர் கொளத் தங்குமிடமற்றுப் போயினர். அழியா வாழ்வினர் எவரும் உளரா? அவ்வழிவு வாராமுன்னர்ப் பற்றறத் துறந்து வாழ்வாயாக என்கிறது அடுத்தபாட்டு (363).

"உண்டும் தின்றும் இரப்போர்க் கீந்தும்
மகிழ்கம் வம்மோ,
பெருங்காடு எய்திய போது, இவை
அரிய ஆகலும் உரிய"

என மறப்போர் வீரரை அழைக்கிறது அடுத்தபாட்டு (364).

"முன்னோரெல்லாம் செல்லவும் யான் செல்லாது உள்ளேன் என்று நிலமகளே அழுகிறாள்" என்கிறது அடுத்த பாட்டு (365). நிலமகள் அழுத காஞ்சி என்கிறது அது. பாடியவர் பெயர் மார்க்கண்டேயர் என்றுளது.

"ஒரு தாம் ஆய பெருமையோரும் சென்று மாய்ந்தனர்" வெறியாடு களத்தில் நிறுத்தப்பட்ட ஆடுகள் போல எவரும் அழிந்துபடல் உண்டு! இதில் மயக்கம் எதுவும் இல்லை" என்கிறது 366ஆம் பாட்டு. கோதமனார் என்பது புலவர் பெயர்.

புறநானூற்றுப் பாடல்களை அடைவு செய்தவர் திணை, துறை வரிசையைப் போற்றியே செய்துள்ளார். அதனைநோக்க மனையறம் துறவறம் என்னும் துறையில் அமைந்த 358ஆம் பாட்டும் பெருங்காஞ்சிப் பொருளாகவே உள்ளமை புலப்படுகின்றது. அதனைப் பாடிய புலவர் பெயர் வான்மீகியார் என்பது. அப்பாடல்,

"பருதி சூழ்ந்த இப் பயங்கெழு மாநிலம்
ஒரு பகல் எழுவர் எய்தி அற்றே
வையமும், தவமும் தூக்கில், தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆகலின்
கைவி ட்டனரே காதலர்; அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே"

என்பது இப்பாட்டும் பெருங்காஞ்சிப் பொருளவேயாம்.

"ஞாயிறு உலாவும் இப்பயன்மிக்க பெரிய உலகம் ஒருநாளில் பலரை ஆள்வோராகக் கொண்டது. உலகையும் தவத்தையும் ஆராய்ந்தால் தவத்துக்கு உலகம் கடுகளவும் ஒப்பாகாது. ஆதலால் வீட்டின்பம் விரும்பினோர் இல்வாழ்வில் பற்றுவிட்டனர். திருமகள், தன்னிடத்துப் பற்றுவிட்டவரை விடாது பற்றிக் கொள்வாள்; இவளால் பற்றிக் கொள்ளப்படாதவர் இல்வாழ்வில் பற்று விடாதவராக இருப்பர்" என்பது இதன் பொருள்.

இவ்வகையால் பத்து எனப்பட்ட பெருங்காஞ்சிப் பாடல் தொகை பதினொன்று ஆகின்றது.

மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை என்பதற்கு இளம்பூரணர், மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப்பட்ட பெருங்காஞ்சியும் என உரைவரைந்து,

"இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்"

என்னும் புறப்பாடலை (363) எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். பெருங்காஞ்சியை அடுத்து நிற்கும் முதுகாஞ்சிக்கு,

"பல்சான் றீரே பல்சான் றீரே"

என்னும் புறப்பாடலை (195) எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். அப்பாடலைப் பெருங்காஞ்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறும் நச்சினார்க்கினியர், இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்' என்னும் புறப்பாடலையும் உடன் வைக்கிறார். கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுகாஞ்சிக்கு,

"இனிநினைந்து இரக்கமாகின்றது"

என்னும் தொடித்தலை விழுத்தண்டினார் பாடலைக் காட்டி,

"முதுமை மூப்பாதலால் அது காட்சிப் பொருளாக இளமை நிலையாமை கூறிற்றாம்" என்று கூறி, "இதுவீடு பெறுதற்கு வழிகூறியது" என்கிறார். இவற்றால் பெருங்காஞ்சிக்கும் முதுகாஞ்சிக்கும் உள்ள நெருக்கம் புலப்படும்.

புறப்பொருள் வெண்பாமாலை பெருங்காஞ்சி என்பதனை,

"தாங்கரு திறன்மறவர் தத்தம் ஆற்றல்
வீங்கு பெரும்படையின் வெளிப்படுத் தன்று"

என்கின்றது (காஞ்சிப்படலம்:6). காலமும் கருத்தும் வேறாதல் வெளிப்பாடு இது!

"தடுக்கும் ஆற்றலினையுடைய காஞ்சி மறவர்கள், தங்கள் தங்களது பேராற்றலை மிகப்பெரிய வஞ்சியார் படையினை எதிர்த்து போர் செய்யும் முகத்தான் வெளிப்படுத்தியது" என்பது இதன் பொருளாம்.

காஞ்சித் திணையின் எப்பாலும் நிலையாமை இயற்கையைக் கூறி நிலைபேறியற்கைக்கு மாற்றியமைக்கும் வெற்றி நிலையே என்பதைக் காட்டும் அதன் மற்றைத் துறைகள் பத்தொன்பதையும் பெயரிட்டு வகையாலேயே விளக்கம் செய்கிறார் ஆசிரியர் தொல்காப்பியர்.

1. மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும் (பெருங்காஞ்சி)
2. கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் (முதுகாஞ்சி)
3. பண்புற வரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் மறத்தி னானும் (மறக்காஞ்சி)
4. ஏமச்சுற்றம் இன்றிப் புண்ணோன் பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும் (பேய்க்காஞ்சி)
5. இன்னன் என்று இரங்கிய மன்னை யானும் (மன்னைக்காஞ்சி)
6. இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும் (வஞ்சினக்காஞ்சி)
7. இன்னகை மனைவி பேஎய் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும் (தொடாக்காஞ்சி)
8. நீத்த கணவன் தீர்த்த வேலின் பேர்த்த மனைவி ஆஞ்சி யானும் (ஆஞ்சிக்காஞ்சி)
9. நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பா டஞ்சிய மகட்பா லானும் (மகட்பாற்காஞ்சி)

10.முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்தாகும் என்ப; பேரிசை (முதுநிலைக்காஞ்சி)

11. மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும் (பூசல் மயக்கம்)

12.தாமே எய்திய தாங்கரும் பையுளும் (பையுள்நிலை)

13.கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும் (மூதானந்தம்)

14.நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும் (முதுபாலை)

15.கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் (கையறுநிலை)

16.காதலி இழந்த தபுதார நிலையும் (தபுதாரநிலை)

17.காதலன் இழந்த தாபத நிலையும் (தாபத நிலை)

18.நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும் (பாலைநிலை)

19.அரும்பெறற் சிறப்பில் புதல்வற் பயந்த
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்
(தலைப்பெயல் நிலை)

20.மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண் குடைத்தே.
(காடு வாழ்த்து)

இறப்பு என்பதன் பொருள் சாவு மட்டுமா? சிறப்பும் தானே? மாண்டார் என்பதன் பொருள் இறந்தார் என்பது மட்டுமா? பெருமையுற்றார் என்பதும் இல்லையா?

நம்மோடு இருந்து கடந்தார் – எட்டாத நிலைக்கு நடந்தார்! அளவு கடந்த, அளவிறந்த இல்லையா?

சொல்லாலே வாழ்வியல் சுட்டும் பெருமையது சுடர்த்தமிழ்!

சங்கப் புறப்பாடல்கள் வீரயுகப் பாடல்களா?

முனைவர் க.சின்னப்பா, எம்.ஏ., பி.எச்.டி.,
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

முன்னுரை :

பழந்தமிழ் இலக்கியமாகத் திகழும் சங்க இலக்கியம், பல சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டதாகும். காதலும், வீரமும் அக்கூறுகளுள் பெருமையுடையனவாகும். இவ்விரண்டு கூறுகளும் பழந்தமிழர் வாழ்வின் பண்பாட்டுக் கூறுகள். இப்பண்பாட்டுக் கூறுகள் ஒன்றோடு ஒன்று உறவு உடையன. இவ்வுறவைப் பற்றி "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப" என்று கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற எழுதிணைக்கும் காதலுக்கு ஒழுக்கம் கூறுகின்றது. இவ் அகத்திணை என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொரு திணைக்கும் புறமாக,

வெட்சி	–	குறிஞ்சிப் புறன்
வஞ்சி	–	முல்லைப் புறன்
உழிஞை	–	மருதப் புறன்
தும்பை	–	நெய்தல் புறன்
வாகை	–	பாலைப் புறன்
காஞ்சி	–	பெருந்திணைப் புறன்
பாடாண்	–	கைக்கிளைப் புறன்

என்று தொல்காப்பியமும் பண்பாட்டுக் கூறுகளான காதலுக்கும், வீரத்திற்கும் உள்ள உறவைப் பற்றிக் கூறுகின்றது. அகத்திணை ஒழுக்கமாக இருக்கக் கூடிய காதலில் அறத்தோடு நிற்றலும், புற ஒழுக்கமாகிய வீரத்தில் மறத்தோடு நிற்றலும் சிறப்பு.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் இயற்கையாகவே மறப்பண்பு படைத்தவராக விளங்கினர். அவர்களுடைய பழக்கவழக்கம், தொழில், விளையாட்டு போன்றவை யாவும் போர்ப் பண்புடன் திகழ்ந்தன. தமது பிள்ளைகளின் மார்பில் ஐம்படைத்தாலி அணிந்து இன்புற்றனர். இதனை,

பொன்னுடைத் தாலி யென்மகன் - (அகம்).
தாலி களைந்தன்று மிலனே - (புறம்).
புலிப்பற் றாலிப் புதல்வன் - (குறும்).
புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி - (அகம்).
புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர் - (புறம்).
வள்ளிதழ்க் குறவியுங் குறிஞ்சியுங் குலையுட
நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை - (மலைபடு).
ஏறு பொறச் சேறாகி - (பட்டினப்).

சங்கு, சக்கரம், தண்டாயுதம், வாள், வில் ஆகிய ஐந்து கருவிகளின் உருவங்கள் அமைந்த இத்தாலியைப் பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்கு அணிவித்தனர். இத் தாலியைப் பற்றி அகநானூறும், புறநானூறும், குறுந்தொகையும் குறிப்பிடுகின்றன. இத்தகைய அடையாளக் குறியீடுகள் தன் மகன் வீரனாகச் சிறக்க வேண்டும் என்பதாகும். ஓர் ஆண்மகனின் குழந்தைப் பருவத்திலிருந்தே வீரம் ஊட்டப்படுவதை அறியமுடிகின்றது.

வீரயுகப்பாடல்கள்

பண்பாட்டுக் கூறுகளில் வீரத்தை பற்றி உலகியல் அறிஞரான C.M.பௌரா, "வீரநிலைக் காலக் கவிதையைக் கற்பது, இலக்கியத்திற்காகவும், சமூகவியலை அறிவதற்காகவும் ஆகும். இக்கவிதையில் பல நற்பண்புக் கூறுகள் உள. சுவை பயக்கும் நலத்தன. வீரநிலைக் கவிதை, பயின்ற சமுதாயத்தையும், அவர் தம் பண்பு நலனையும், எண்ணத்தையும் எதிரொலிப்பது ஆகும்". என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ் வீரயுகப் பாடல்களைப் பார்ப்பதற்கு முன்பு உலக இலக்கியங்களின் வீரநிலைப் பாடல்களின் பாடுபொருளை ஆராய வேண்டியுள்ளது.

"வீரயுகங்களுள் காலத்தால் முந்தையது கிறித்துவிற்கு முன் மூவாயிரம் ஆண்டளவிலே மெஸொப்பெத்தோமியாவில் நிகழ்ந்த சுமேரிய வீரயுகமாகும். அதற்கு அடுத்தபடியாகக் கிறித்துவிற்கு முன் ஈராயிரமாண்டுகளுக்கு முன் பின்னாகக் கிரேக்கத்தில் நிகழ்ந்த வீரயுகத்தைக் கொள்ளலாம். வடஇந்தியாவில் இதிகாசங்கள்

குறிக்கும் வீரயுகத்தைத் தவிர்த்தால், கால வரிசையில் அடுத்தபடியாக அமைவது பழந்தமிழரது வீரயுகமாகும். கிறித்துவிற்கு எழுநூறு ஆண்டுகள் முன் தொடங்கி இருக்கலாம். ஆயினும் பெரும்பாலும் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் இது நிகழ்ந்தது எனக் கருதுவது பொருத்தமாகும். உலகில் பிற பகுதிகளிற் காணப்படும் வீரயுகங்களும், அவற்றைச் சேர்ந்த பாடல்களும் கிறித்துவிற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்தே தோன்றின. இந்த வகையில் கால ஒழுங்கின்படி தமிழரது வீரயுகம் புராதன சுமெரியர், கிரேக்கர் முதலியோரின் வீரயுகங்களுடன் ஒருசேர வைத்து நோக்கும் பெருமையுடையது எனலாம் என்று டாக்டர்.கைலாசபதி (க.கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம் ப.71) அவர்கள் தமிழரின் புறநானூற்றின் வீரத்தைப் பழமையான இலக்கியத்தோடு ஒப்பிடுகிறார்.

வீரயுகப் பாடல் பாடும் மரபு :

காதலும், வீரமும் என்ற பண்பாட்டு மரபில், காதலாகிய களவு வாழ்க்கையைத் தலைவி, தோழி, நற்றாய், செவிலி போன்ற பெண்பாத்திரங்கள் கற்பு வாழ்க்கையாகத் தொடங்க அறத்தோடு நிற்பர். "பெருமையும், உரனும் ஆடூஉ மேன" (தொல்.களவு) என்று இருப்பதால் வீரத்திற்கு ஆண்மகன் மட்டும் செயல்பாட்டுக்கு உரியவனாகி இருக்கின்றான். அதனால் தான் "வினையே ஆடவருக்கு உயிரே" என்கின்றனர். ஆண் மகன் வினை (செயல்) யில் சிறந்து விளங்கினால்தான் பெண்மகள் கூட அவ்ஆடவன் மீது காதல் கொள்பவளாக இருந்தாள்; இருப்பாள். அக இலக்கியப்பாடல்களில் தலைவி தேர்ந்தெடுக்கும் தலைவன் கொடிய விலங்கினை வீழ்த்துபவனாகவும், ஏறுதழுவும் ஆடவனாகவும் இருக்கவேண்டும் என விரும்புவாள். உடன்போக்கறிந்த நற்றாயும், செவிலியும், மனவருத்தப்படாமலும் வீரனுடன்தான் என் மகள் சென்றிருக்கிறாள் என்பதை நினைத்து தனக்குள் பெருமைப்பட்டனர். ஆகையால்தான் ஓர் ஆண் மகனுக்கு வீரம் என்பது இன்றியமையாததாக இருக்கின்றது.

"வீரத்தில் சிறந்து விளங்குகின்ற வீரனைப் பாடுகின்ற மரபு தமிழ் இலக்கியத்தில் பெண்ணிற்கும் இருந்தது. தொன்மையான

உலக இலக்கியமாகிய பழைய கிரேக்கம், செக்கஸ்லோவிய நாடு, செர்மானிய நாடு போன்ற நாடுகளில் வீரநிலைப்பாடல்களை மகளிர் பாடியதாகச் சான்று இல்லை என்ற மேலைநாட்டினரின் கருத்தை கதிர்மகாதேவன் தனது நூலில் குறிப்பிடுகின்றார். (கதிர்மகாதேவன், பழந்தமிழர் வீரப் பண்பாடு ப.29)

வீரநிலைப்பாடல்கள் செயற்கரும் செயல்களையே புகழும். பிறநாடுகளில் இது மாயாசாலக் கதைகள் போலத் தொடங்கிப் படிப்படியாக வீரநிலைப்பண்பை எய்தின என்பர். வடமொழியில் இராமாயண, மகாபாரதப் போர்கள் பல மந்திர தந்திரங்கள் நிறைந்தனவாக வருணிக்கப்படுகின்றன. வெட்டிய கை முளைக்கிறது; வீரன் பலவடிவம் எடுக்கிறான்; இப்படி எத்தனையோ சாலங்கள். ஆனால் வீரநிலைப்பாடல்கள் வீரனின் சிறப்பை உள்ளபடி புனைய முனைகின்றன. பெரும்பாலும் பிறநாட்டுப் புறப்பாடல்களில் இவ்விருதிறமும் கலந்தே காணப்படும். தமிழில் தூய வீரநிலைப்பண்பை நாம் காண்கிறோம் என்று தமது நூலில் தமிழண்ணல் குறிப்பிடுகின்றார். உலக இலக்கியங்களைவிட தமிழக வீரநிலைப்பாடல்களில் வீரனை உள்ளபடி பாடுகின்ற வீர மரபினைக் காணமுடிகின்றது.

வீரனின் சிறப்பு :

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

(புறநானூறு – 165:1–2)

மனிதனாய்ப் பிறந்த ஆண்மகன் தன் புகழை வீரத்தினால் நிறுவவேண்டும் என்று ஆண் மகனுக்கு இலக்கணம் கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது. சிறந்த வீரமகன் போரென்று கேட்டால் அதனை விரும்பி ஆரவாரிக்கும் கண்ணை உடைய வீரத்தமிழனாக இருக்க வேண்டும் (அகம்) ஊரிலுள்ள மன்றிக்கண் தூங்கும் முழவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையைக் கேட்டு, அது போர்ப்பறையென மகிழ்வர் (புறம்). பகைமன்னன் மீது போர் தொடுக்கும் போது கடைபிடிக்கும் அறமாக,

"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடைமீரும், பேணித்
தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்"

(புறம் நானூறு 9:1–5)

என அரசன் போரில் ஈடுபடாதவர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள் என்று கூறும் மறப்பண்பு உடையவன் என்று பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடுகிறார்.

உருவத்தைக் கண்டு ஒரு மன்னனை எளிதாக வெற்றி கொள்ள முடியாது என்பதனை, போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை:

"ஊர்க் குறுமாக்கள் ஆடக் கலங்கும்
தாள் படுசில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
நுண்பல் கருமம் நினையாது
இளையன் என்று இகழின் பெறல் அரிது ஆடே"

(புறநானூறு – 104)

என்னும் பாடல் "வீரர்களே நுமக்கு நாங்கள் அறிவிப்போம். ஊரின்கண் உள்ள இளஞ்சிறுவர்களின் முழங்கால் அளவு நீரில் வாழும் முதலை, யானையைக் கொன்று வீழ்த்திவிடும். அதுபோல எம்மன்னனின் வலிமையும் நுண்ணிய ஆற்றலும் அறியாது இளையன் என்று போர்த்தொடுப்பின் நீங்கள் வெற்றி பெறுதல் அரிது. ஆகவே உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று அதியமான் நெடுமான் அஞ்சியின் வீரத்தை ஔவையார் பாடுகிறார். இன்னொரு மன்னன்,

"நகுதக்கனரே, நாடு மீக்கூறுநர்
'இளையன்இவன்' என உளையக் கூறி
படுமணி இரட்டும் பாஅடிப் பணைத் தாள்
நெடு நல்யானையும், தேரும் மாவும்,

படை அமை மறவரும், உடையம் யாம் என்று
உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கி
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அருஞ் சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது,
'கொடியன் எம்இறை' எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"

(புறநானூறு 72, 1–12)

என்னும் பாடல் வரிகள் பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை மிகவும் இளையவன், இவனுடைய நாட்டை உயர்வாகப் புகழும் புலவர்கள் நகைப்பிற்கு உரியவர்கள் என்று எண்ணி, யானை, தேர், குதிரை போன்ற படைகளைக் கொண்ட மன்னர்கள் என் வலிமைக்கு அஞ்சாது இழிவான மொழிகளைச் சினமுடன் கூறினர். அவர்களைப் போரில் வெல்லுவென். அவ்வாறு வெல்லவில்லை என்றால் என்னை நம்பி வாழும் மக்களுக்கு நம் அரசன் கொடியவன் என்று எம்மக்கள் கூறும் கூற்றுக்குப் பழி ஆவேன் என்று வஞ்சினம் கூறுகின்றான். இப்பாடல் வரிகள் வஞ்சித்திணையாக வந்துள்ளது. வஞ்சிப்போர் என்பது நாட்டைக் கவர்வதும் காப்பதும் ஆகும்.

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்று"

(தொல்.புறம். 1008)

என்னும் வரிகள் வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சும்படி படையெடுத்துச் செல்வதாகப் பொருள் தருகின்றது.

போரில் வீரன் ஒருவன் மற்றொரு வீரனைப் பொருது நின்று போரிட்டு வெற்றி கொள்வது வெற்றி இல்லை; ஒன்றுக்கு மேற்பட்டவர்களை வென்று வருதல் பெரும் வெற்றி என்று சிறப்பாகப் பாடப்பட்டது. பரணி பாடுதல் போரில் ஆயிரம் யானையை வென்றவனுக்குத்தான் பாடப்படுவதாகப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றது. வெற்றி வாகை சூடிவரும் வாகைத்திணையைத் தொல்காப்பியம்,

"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"

(தொல். புறத்திணை 1020)

பிறரினும் மேம்பட்டு முன்னேறி உயர்வதும் வாகையே என்று குறிப்பிடுகின்றன. இத்துறையைப் பின்பற்றி அரசவாகை என்னும் பாடல்,

"ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்
புதுவது அன்று; இவ் உலகத்து இயற்கை
....
புனை கழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதான் ஆகிப் பொருது, களத்து அடலே"

(புறநானூறு 76

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஏழு மன்னனைப் போரில் வெற்றி பெற்றதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. அவ்வெழு மன்னர்கள் யார் என்பதை அகநானூறு 36வது பாடல் அந்த எழுவர் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்று பெயர்ப் பட்டியலைத் தருகின்றது.

பாரியினது வீரம் :

பாரியின் மகளை வேண்டி பெண்கேட்ட பொழுது பாரி மன்னன் பெண் கொடுக்க மறுக்கின்றான். ஆகையால் மகள் மறுத்தல் என்னும் துறையாகின்றது. மேலும், மகள் வேண்டி தராமல் மறுத்தபோது சேரர், சோழர், பாண்டியர் உள்ளிட்ட மூவேந்தர் பாரியின் பறம்பு நாட்டைச் சுற்றி வளைக்கின்றனர். ஆகையில் இப்பாடலானது நொச்சித்திணையாகிறது. மூவேந்தர்களின் படைகள் பறம்பு நாட்டைச் சுற்றியிருந்த போதும், கபிலர், பாரியின் சிறப்பை,

"சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர
ஆடினர் பாடினர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே"

(புறநானூறு 109–15–18)

என்னும் பாடல்வரிகள் மூவேந்தர்கள் யானை, தேர், குதிரை ஆகிய படைகள் வைத்திருப்பதால் பாரிமன்னன் மீது போரிட்டு அவனை வென்று பறம்பு நாட்டைப் பெறமுடியாது. மாறாக மூவேந்தர்களும் பரிசில் பெற விரும்பி பாடினி, விறலி, பாணர் போன்று வேடமிட்டு பரிசில் பெறுபவர்போல் வந்து பறம்பு நாட்டைப் பெறலாம் என்று பாரியின் வீரத்தைக் குறிப்பிடுகின்றார்.

வல்வில் ஓரியின் வில்லாற்றல்

பாணர்தன் சுற்றத்துடன் கொல்லி மலையைச் சார்ந்த சுரத்தே சென்று, வேட்டையாட வந்த வல்வில் ஓரியைப் பாடி பரிசு பெற்று ஓரியின் வில்லாற்றலை,

"வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ் வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ
புழல் தலைப் புகர் கலை உருட்டி, உரல் தலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம் வலம் படுத்து இருந்தோன்"

(புறநானூறு 152–1–6)

ஓரியின்வில் யானையை வீழ்த்தி, புலியின் அகன்ற வாயில் ஊடுருவிச் சென்று, பின் துளை பொருந்திய கொம்பையுடைய கலைமானை வீழ்த்தியது. பின் உரல்போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியைக் கொன்றது. பின் அதற்குப் பக்கத்தில் உள்ளதாகிய புற்றில் உள்ள உடும்பில் சென்று தைத்தது என்று ஓரியின் வில்லாற்றலைக் குறிப்பிட்டு வலிமையான அம்பு செலுத்தும் வில்லாற்றல் பெற்றதால் ஓரி வல்வில் ஓரி என்னும் சிறப்பினைப் பெற்றான் என்பதனை அறியமுடிகின்றது.

இருதுறைப் பாடல்கள் :

"இல்லும் பதியும் இயல்பும் கூறி
நல் ஆண்மையை நலமிகுத் தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை, வல்லாண்முல்லை)

ஒருவனுடைய வீட்டையும், ஊரையும், இயல்பினையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லுதல் வல்லாண் முல்லைத்துறையாகும்.

போர் செய்தற்கு எதிர்த்த இருவகைப் படைகளும் தம்முள் பொருத முடியாத வண்ணம் ஒரு வீரன் பாதுகாத்த ஆற்றலின் உயர்ச்சியைச் சொல்லுதல் தானைமரம் எனப்படும். இந்த இரண்டு துறைகளும் பிட்டங்கொற்றனைப் புகழும் பாடல்களில் வந்துள்ளன. அவை:

"மரை பிரித்து உண்ட நெல்லி வேலி,
பரலுடை முன்றில் அம் குடிச் சீறூர்
....
சிறுகண் யானை வெண்கோடு பயந்த
ஒளி திகழ் முத்தம் விறலியர்க்கு ஈத்து
நார் பிழிக் கொண்ட வெங்கள் தேறல்
பண் அமை நல் யாழ்ப் பாண் கடும்பு அருத்தி,
நசைவர்க்கு மென்மை அல்லது, பகைவர்க்கு
இரும்புபயன் படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் அன்ன, வல்லாளன்னே"

(புறநானூறு 170: 1,2, 10–17)

என்னும் பாடல் வரிகள் காட்டுப்பசுவால் (மரையாவால்) பிரித்து உண்ணப்பட்ட நெல்லி மரங்களால் ஆகிய வேலியையும், அதன் விதையாகிய பரலுடைய முத்தினையும், அழகிய குடியிருப்புகளையும் உடைய அழகிய சீறூர் என்னும் ஊரின் சிறப்பையும் குறிப்பிட்டு மேலும் பகைவர்களுக்கு பிட்டங்கொற்றன் என்னும் மன்னன் இரும்பு போன்றவன் என்று குறிப்பிடப்படுவதால் வல்லாண் முல்லை என்னும் துறையாகியது.

சிறந்த வீரன் :

சிறந்த வீரனுக்கு என்றும் மதிப்புண்டு. பறம்பு நாட்டுத்தலைவன் பாரி இறந்தவுடன் அவனது பெண்ணை வீரத்தில் சிறந்து விளங்கும் இருங்கோவேளிடம்,

" ....
நாற்பத்தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறற் போர் அண்ணலே!

தார் அணி யானை சேட் இருங்கோவே!
ஆண் கடன் உடைமையின் பாண் கடன் ஆற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடிமால்!
யான் தர, இவரைக் கொண்மதி! – வான் கவித்து
இருங்கடல் உடுத்த இவ் வையகத்து அருந்திறல்
பொன்படு மால் வரைக் கிழவ! வென் வேல்
உடலுநர் உட்கும் தானை
கெடல் அருங்குரைய நாடு கிழவோயே!"

(புறநானூறு 201 : 11–20)

நாற்பத்தொன்பதாவது தலைமைமுறைகளைக் கொண்ட வேளிர்களுள் ஒருவன்; வெற்றி பொருந்திய போரையுடைய தலைவன்; ஆண் மக்கள் செய்யும் கடமை உணர்ந்து பாணர்களுக்குச் செய்ய வேண்டிய உதவி செய்யும் கொடையாளன்; பொன்விளையும் மலைக்குச் சொந்தக்காரன்; வெற்றிதரும் வேலையையும், பகைவர் அஞ்சும் படையையும் உடைய கேடில்லாத நாட்டிற்குத் தலைவனே! நீ பாரிமகளிரைப் பெற்றுக் கொள்வாயாக என்று சிறந்து விளங்கக் கூடிய ஒரு மன்னனுக்குப் பாரிமகளிரை கபிலர் கொடுக்க நினைக்கிறார்.

ஒரு கரந்தை வீரன் வெட்சி மறவர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்பதற்கு முன், தன் வீரர்களுக்கு,

"கால மாரியின் அம்பு தைப்பினும்
வயற் கெண்டையின் வேல் பிறழினும்
பொலம் புனை ஓடை அண்ணல் யானை
இலங்கு வால் மருப்பின் நுதி மடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடையாளர்"

(புறநானூறு : 287–3–7)

மழை போல் அம்பு உடலில் தைத்தாலும், கெண்டை மீன்கள் போன்ற வேல்கள் வந்து பாயினும், பொன்னால் போர்த்தப்பட்ட பெருமை மிக்க யானை தன் வெண்மையான கூரிய கொம்புகளைக் கொண்டு குத்தினாலும், அஞ்சிப் புறம் கொடுத்து ஓடாத ஆண்மை மிக்க மறவர்கள் என்று கூறி தன் படைவீரர்களைப் போருக்கு ஆயப்படுத்துகின்றான்.

ஆண்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே அணிவிக்கப்படும் ஐம்படைத்தாலி போன்ற வீரக்குறியீடுகள் வீரத்தை உணர்த்துகின்றது. போர் செய்கின்ற மரபும், உண்மையான வீரமும் தோல்வி கண்டாலும் வீரத்துடன் இருக்கின்ற நிலையும், சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது.

மூதின் முல்லை:

ஆண்மக்களின் வீரக்குடியைக் குறிப்பிட்ட தொல்காப்பியர், பெண்ணின் வீரத்தைப் புறத்திணையில் பேசவில்லை. ஆனால் உரையாசிரியர்கள் மூதின் முல்லை என்று வந்ததனை 'பெண்ணின் மறம்' என்று குறிப்பிடுகின்றனர். மூதின் முல்லை என்னும் துறை புறப்பொருள் வெண்பாமாலையில்,

"அடல்வேல் ஆடவர்க்கன்றியும் அவ்இல்
மடவரல் மகளிர்க்கும் மறமிகுத்தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை, வாகை, 21வது துறை)

என்றும் கரந்தையில் குடிநிலைபற்றிப் பொதுவாக,

"மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறனும்
கொண்டு பிறறறியும் குடிவரு வுரைத் தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைத்துறை – 14)

என்று வீரத்தைப் பற்றி குறிப்பு உள்ளது. புறநானூற்றில் மூதின்முல்லைத் துறைப்பாடல்கள் 279, 288, 306, 308, 312, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 334, 335 என்னும் பதினைந்து பாடல்கள் உள்ளன. இதில் 288வது பாடல் மட்டும் தும்பைத்திணையில் வரும். மீதி பாடல்கள் அனைத்தும் வாகைத்திணையில் வருவதாய் அமைந்துள்ளன.

மூதின் முல்லை என்பதை மூதில்+முல்லை எனப்பிரித்து பொருள் கொள்ளலாம். மூதில் என்பது மூது+இல் எனப்பொருள் கொண்டால் 'பழைய மறக்குடி' எனப்பொருள்படும். மூதில் முல்லை என்பது மறக்குடியின் பாற் பிறந்த ஆண்மகற்கேயன்றி அக்குடியில் பிறந்த மகளிர்க்கும் மறம் உண்டாதலைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை என்று ஐயனாரிதனாரின் கருத்தைச் சென்னைத் தமிழ்ப் பேரகராதியும் குறிப்பிடுகின்றது.

வீரத்தாயின் குதின் முல்லை :

ஒரு தாய் ஈன்றெடுத்த மக்களை, கல்வி கேள்விகளில் பயன்படுத்தாமல், அலட்சியப் போக்கில் விட்டு விடுவார்களேயானால் எந்த நாடுமே குன்றும், சீர்குலையும், எடுப்பார்க் கைப்பிள்ளையாகிவிடும். எனவே தாயானவள் தான் பெற்ற குழந்தை வளருவதற்காக வேண்டி எப்படி பாலமுதம் ஊட்டுகிறாளோ, அது போலவே அந்தக் குழந்தை விவேகத்திலும் வீரத்திலும் எதிர்காலத்தில் சிறந்து விளங்க தமிழமுதம் ஊட்டப்பெற வேண்டும். அப்படி ஊட்டப்படுவதில் தியாகபுத்தி, தெளிவான சிந்தனை, வீரத்தின் இயல்பு ஆகியவை கலந்திருக்கும் படியாக ஊட்ட வேண்டும் என்பதை உணர்ந்த சங்கத் தமிழ்த்தாய், தான்பெற்ற குழந்தைக்கு யார்? யார்? என்ன என்ன கடமை செய்ய வேண்டும் என்பதை,

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிருவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறநானூறு : 312)

என்னும் பாடல் வரிகள் தம்மின் தம்மக்கள் அறிவுடையோராக இருத்தல் வேண்டும் எனக்கருதினர். தனக்கு மட்டுமின்றி, இவ்வுலகில் வாழும் யாவர்க்கும் இனியவனாக இருக்க கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றில் திறம் பெற்றவனாக உருவாக்குதல் தந்தைக்குக் கடமை.

வீரனாக வாழும் ஆண்மகனுக்கு நல்ல நெறியைக் கற்றுக்கொடுத்தல் அரசனுக்குக் கடமை. தாய், தந்தை, சமுதாயம், அரசு ஆகிய நான்கு நிலைகளிலும் உதவியைப் பெற்ற ஒருவன், திருப்பிச் செய்யும் கடமை, போர்க்களத்தில் பகைவர்களின் யானைப் படைகளை அழித்து வெற்றியுடன் மீளுதலாகும் என்று ஒரு மகனைப் பெற்ற தாய் நாட்டிற்கான கடமைகளைப் பட்டியலிடுகிறாள்.

இன்னொரு வீரத்தாய் இறுதிகாலத்தில் தனக்கென்று இருந்த கடைசி மகனையும் வீரத்துடன் போருக்கு அனுப்புவதை,

"கெடுக சிந்தை கடிதிவன் துணிவே
மூதிற் பெண்டி ராதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநரை விலக்கி ஆண்டுபட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

(புறநானூறு 299)

என்ற புறப்பாடல் போர்ப்பரணி பாடுகிறது. இதில் மூன்று களங்கள் உள்ளன. முதல் களத்தில் தன் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாவது களத்தில் தன் குடும்பத் தலைவனைப் (தன் கணவனைப்) பறிகொடுத்தாள். மூன்றாவது களத்திற்குப் போர்ப்பறை கேட்டு தன் வாழ்வுக்கென்று இறுதியாக இருந்த பருவம் எய்தாத செல்வச் சிறுமகனைப் போருக்கனுப்பிய வீரத்திண்மையை அறியமுடிகிறது.

ஏறாண் முல்லை மறப்பெண் :

ஏறாண் முல்லை என்பது வீரம் செறிந்த குடியில் பிறந்த ஆண்மகனின் இயல்பைப் புகழ்தல் ஆகும். ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் உன் மகன் எங்கே என்று கேட்டதற்கு,

"சிற்றில் நற்றூண் பற்றி, நின் மகன்
யாண்டு உளனோ? என வினவுதி என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்" ஒரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன்மாதோ போர்க்களத்தானே"

என்று தன் மகனை வினவிய ஒரு பெண்ணிற்குப் பதில் கூறும் தாய். "புலி இருந்த வயிறு இது! அவன் வேறு எங்கும் சென்றிருக்க மாட்டான். போர் நிகழும் களத்தில் தோன்றுமியல்புடையன் ஆகையால் அவனைக் காண்பதற்குப் போர்க்களம் செல்" என்பதை உணர்த்துகிறாள்.

உவகைக் கலுழ்ச்சி மறப்பெண் :

வாளால் உண்டான விழுப்புண் மிக்க உடம்பைக் கண்டு மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பது உவகைக் கலுழ்ச்சியாகும். வெண்மையான நரைத்த கூந்தலை உடைய ஒரு முதாட்டியின் மகன் போர்க்களத்தில் களிற்றினை எறிந்து வீழ்த்தி தானும் இறந்தான் என்ற செய்தி கேட்டு மனமகிழ்ந்தாள் (புறம்–277). சங்கத்தாயின் செல்வன் வீரத்தின் உருவமாகவே இலங்கவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு அக்காலப் பெண்டிர் புறப்புண்பட்டு வீழ்ந்திருப்பானேயானால் அவன் பால் அருந்தி வரக்காரணமாயிருந்த இந்த முலைகளை வாளால் துண்டிப்பேன் என்று வீரவசனம் பேசிய அம்முதியவள் போர்க்களம் வந்து தன் மகனைப் பார்க்கிறாள். அவன் மார்பில் விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடக்கிறான். அதைக் கண்ட அத்தாய் தான் ஈன்ற பொழுதைவிட மகிழ்ச்சியுற்று ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள் (புறம் – 278). இன்னொரு தாய் தன் மகன் எதிரியின் சேனையின் நடுவிலே சென்று அவர்களை எல்லாம் வெட்டி, தானும் இரு துண்டாகிக் கிடப்பதைக் காண்கின்றாள்.

"சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே"

(புறம் – 295)

என மனம் குளிர்ச்சியுற்றதை அறிய முடிகிறது. இத்தகைய வீரமகளிர் அக்காலத்திலே இருந்து வந்தனர். ஆடவர் அளவுக்குப் பெண்டிரும் மறச்செருக்குடன் இருந்தனர். ஆண்மகன் தன் குடும்பத்தைக் காப்பதை விட தன் நாட்டுக்காக உயிர் நீத்தலைக் கண்ட மறப்பெண்கள் மனம் மகிழ்ந்ததையும், ஆண்மகன் வீரனாக இருத்தலையே மறப்பெண்கள் விரும்புதலையும் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

முடிவுரை :

1. ஆண்மகனுக்குக் கருவறையிலே தன்தாய் வீரத்தினை ஊட்டும் மரபு உள்ளது.

2. குழந்தைப் பருவத்தில் ஐம்படைத்தாலி அணிதல் வீரக்குறியீட்டின் சடங்காக இருக்கின்றது.

3. இறந்த வீரன் தோல்வியின் நிலையிலும் வீரத்துடன் இருத்தலை உணர்த்துகின்றது.

4. மறக்குடிப் பெண்கள் நாட்டின் காவலைப் பெரிதும் விரும்பி தனக்கு இறுதிக்காலத்தில் துணையாக இருந்த கடைசி மகனையும் போர்ப்பறைக்கு அனுப்பி வைத்தல் தேசம் காத்தலை உணர்த்துகிறது.

5. தன்மகன் போரில் இறந்தாலும் மார்பில் விழுப்புண்பட்டு இறத்தலையே பெண்மகளும் விரும்புதலைச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

மேலும் ஆய்வுக்கு :

1. சங்க காலம் குறுநில மன்னர்களின் இறுதிக்காலம் என்பதை ஆய்வு செய்யலாம்.

2. சேரர், சோழர், பாண்டியர் என்ற பேரரசுகள் உருவாகிய காலம்.

3. ஐந்நில மரபு மறைந்து ஒரு தேசம் கட்டமைக்கப்பட்ட காலம்.

குறளறிவியல்

முனைவர். மெ.மெய்யப்பன்

வான் சிறப்பு

பிறந்தது முதல் இறக்கும் வரை வாழும் வாழ்க்கை முழுமைக்கும் தேவையான அறநெறிகளை மென்மையான அறிவுரைகளாக்கிக் கூறுவது திருக்குறள். இதில் வரும் கருத்துக்கள் யாவும் இயற்கையின் சாயலில் சொல்லப்பட்டிருப்பதால் இயற்கையைப் போல அவை என்றும் மாறாத் தன்மை கொண்டு விளங்குகின்றன.

எல்லோர்க்கும், எக்காலத்திற்கும் ஏற்புடைய கருத்துக்களாக இருப்பதோடன்றி, அறிவியல் வாசனையையும் ஆங்காங்கே கொண்டிருப்பது இதன் சிறப்பாகும். குறளில் அறிவியல் என்பது தமிழுணர்வு மிக்கோரால் வலிந்து கற்பிக்கப்படும் ஒரு போக்கு என்று கூறுவாருளர். ஆனால் உண்மைநிலை அப்படியில்லை. வள்ளுவரைப்போல, இயற்கையை நேசிக்கும் ஒருவரின் சிந்தனையில் அறிவியல் தொடர்புடைய கருத்துக்கள் வெகு இயல்பாக வெளிப்பட்டுத் தோன்றுவதும், அவர்தம் படைப்புகளில் இடம் பெறுவதும் இயற்கையே.

கலையானாலும், அறிவியலானாலும் அவற்றுக்கு ஆதாரமாக இருப்பது இயற்கையே. கலை என்பது இயற்கையை விவரிக்கும் கற்பனைகளின் ஒரு தோற்றம். அறிவியல் என்பது இயற்கையை விளக்கும் உண்மைகளின் தொகுப்பு. கலையும், அறிவியலும் ஒரே இயற்கையின் இரு வேறு வடிவங்களே. வேறுபட்டுத் தோன்றும் இவையிரண்டும் உயரெல்லையில் ஒன்றிணைந்துவிடுகின்றன. அப்போது கலைக்குள் அறிவியலையும், அறிவியலுக்குள் கலையையும் காண முடிகின்றது. இக்கண்ணோட்டத்தில் திருக்குறள், அறிவியல் பொதிந்த ஒரு கலைப்படைப்பாகத் தோன்றுகின்றது. குறட்பாக்களில் அறிவியல் கருத்துக்கள் செறிந்திருப்பதைக் குறள் மற்றும் அறிவியலில் ஒரு சேர ஈடுபாடுடையவர்களால் மட்டுமே எளிதில் உணர முடியும்.

கடவுள் வாழ்த்து மூலம் இயற்கையே இறைவன், இறைவனே இயற்கை என்ற மூல மந்திரத்தைக் கூறி எல்லையில்லாது எங்கும் பரந்து விரிந்து கிடக்கும் இயற்கையை ஒரு பத்து குறள்களுக்குள் அடக்கியுள்ளார் திருவள்ளுவர். இயற்கையின் தன்மைகள் யாவும் இறைவனின் குணங்களாக அதில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தாலே இது விளங்கும்.

எங்கும் நிகழும் இயற்கையின் பிழையற்ற, பிசகற்ற, திட்டவட்டமான செயல்கள் அதன் மெய்யறிவையும், மென் தன்மையையும், அறவழியையும் சுட்டிக் காட்டுகின்றன. வற்றாத செல்வத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அவற்றையெல்லாம் தனக்கென வைத்துக் கொள்ளாது விருப்பு வெறுப்பின்றி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பதால் பகவானாகும் இயற்கையும், தன் ஐம்பொறிகளான நீர், நெருப்பு, நிலம், காற்று, வெளியைக் கட்டுப்படுத்தி பேரண்டத்தையே ஆளுகின்றது. அறவாழி அந்தணர்களைப் போன்று இயற்கையும் ஒத்த சிந்தனை கொண்டது. இயற்கைக்கு இணை இயற்கையே என்பதால் அதற்கு இணையாக வேறொன்றை எவராலும் சுட்டிக்காட்ட முடிவதில்லை.

கடவுள் வாழ்த்தை அடுத்து வரும் வான் சிறப்பு, இயற்கை வடிவிலான இறைவனைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இதில் வரும் பத்துக் குறள்களும் மழை சார்ந்த அறிவியலைச் சமுதாய வாழ்க்கையோடு இணைத்துக் கூறுகின்றன. ஒருவர் ஒரு கருத்தைக் கூறும்போது அதற்கு ஆதாரமாக ஒரு பின்னணி இருக்க வேண்டும். இது அவர்கூறும் கருத்துக்களில் வெளிப்பட்டுத் தெரிவதில்லை. குறளறிவியலும் அப்படிப்பட்டதே. குறளறிவியல் நோக்கில் இனி திருக்குறளைப் புரட்டுவோம்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"

அதிகாரத்தின் முதல் குறளில் பெய்யும் மழைநீரை அமிழ்தம் எனக் குறிப்பிட்டுள்ளார். இன்றைக்குக் கிடைக்கும் இயற்கை நீர் வளங்களுள் மழை நீரே, தூய நீராக உள்ளதால் அதையே அமிழ்தம் எனக் கூறியுள்ளது மிகப் பொருத்தமானது. அமிழ்தம் என்பது சுவை நீரன்று; அது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு நீர்மப் பொருள்; சாவாமைக்கு உற்ற மருந்து; அது சாதாரண நீர்தான். தேவர்கள் கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்றதாக புராணக் கதைகள் கூறுகின்றன. இங்கே அமிழ்தம் என்பது குடிநீரைத்தான் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இந்தப் புராணம் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உண்மைச் சம்பவம் ஆகியிருக்கின்றது. உப்புக் கரிக்கும் கடல் நீரிலிருந்து, தூய குடிநீரைப் பெற இன்றைய ஆட்சியாளர்கள் கடலைத் தான் கடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு குறள் வாயிலாகவும் ஓர் இனிய செய்தியை மக்களுக்கு உணர்த்திக் காட்டுவதே வள்ளுவரின் தலையாய நோக்கம். இக்குறளிலும் அது மறைபொருளாக உட்பொதிந்திருக்கின்றது. நீர், சத்துக்களைக் கொண்ட உணவுப் பொருளில்லை என்றாலும், சத்துக்களைப் பெற அதுவே ஊடகப் பொருளாக விளங்குகின்றது. அதனால் நீரின்றி உலகில் உயிர்வாழ்க்கை ஏதுமில்லை எனலாம். மனிதர்கள் உணவின்றி சில வாரங்கள் கூட உயிர் வாழ்ந்துவிடலாம். ஆனால் நீரின்றி ஒரு சில நாட்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது என்று சொல்வதிலிருந்து நீரின் முக்கியத்தை உணரலாம். இக்குறள் மூலம் வள்ளுவர் சொல்ல வரும் செய்தி என்னவென்றால், அமிழ்தம் போன்ற மழை நீரின் ஒவ்வொரு துளியையும் வீணாக விரயமாக்கி விடாது, பயனுறுதிறன் மிக்க முறையில் பயன்படுத்தி வளம் பெற வேண்டும் என்பதாகும். இங்கு வரும் உலகம் என்பது உலகத்தில் வாழும் மனிதர்களை மட்டுமின்றி எல்லா வகையான உயிரினங்களையும் குறிப்பிடுகின்றது. நீரோடு தொடர்பற்ற உயிரினங்கள் ஏதொன்றுமில்லை என்பதை முழுமையாகப் புரிந்தவர்களே, உயிரினங்களின் வாழ்க்கைக்கு மழைநீர் அவசியமானது என்ற பொதுவான கருத்தைக் கூறமுடியும்.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

உலகில் வாழப்புகும் மக்களுக்கு உண்ண உணவும், குடிக்க நீரும் கிடைக்க இயற்கை தரும் உறுதிமொழி இந்த பாமழையேயாகும். உணவுப் பொருட்களின் விளைச்சலுக்கு நீர் இன்றியமையாதது நீர். ஒரு பொதுவான கரைப்பானாக இருப்பதால் இதில் பெரும்பாலான தாது உப்புக்கள் கரைகின்றன. அதனால் எல்லா உயிரினங்களும் நீரையே ஊடகமாகக் கொண்டு வாழ்கின்றன. வேர் மூலம் இச்சத்துக்களைத் தாவரங்கள் உறிஞ்சி இலைப்பகுதிக்கு எடுத்துச் செல்கின்றன. இலைத் துளைகள் மூலம் காற்றிலுள்ள கார்பன்–டை–ஆக்ஸைடை உறிஞ்சி ஒளிச்சேர்க்கையின் மூலம் அவற்றை ஒன்றிணைந்து சக்கரைப் பொருளை உற்பத்தி செய்கின்றது. இதுவே பிற்பாடு விளைபொருளாக மாறுகின்றது. இதிலிருந்து உணவுப்பொருட்களுக்கு முக்கியமான மூலப் பொருள் மழைநீர் என்பது தெளிவாகும்.

இக்குறளில் வள்ளுவர் நீரையும் ஓர் உணவுப்பொருளாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுவாகத் தூய நீரில் எவ்வித சத்தும் இல்லையென்றாலும் உணவுப் பொருட்களின் செறிமானத்திற்கும்,

உடலால் சத்துக்கள் உட்கிரகிக்கப்படுவதற்கும் நீரே உறுதுணையாக இருப்பதால் நீரையும், இங்கு உணவுக்குச் சமமாகக் குறிப்பிட்டுள்ளார் எனலாம். தாது உப்புக்கள் கரைக்கப்பட்ட நீரில் (mineral water) உலோகச் சத்துக்களும், வைட்டமின் போன்ற உயிர்ச் சத்துகளும் உள்ளன. வறுமையில் வாடுவோர், தம் பசியைப் போக்கிக் கொள்ள நீரையே உணவாகக் கொள்வர்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

மழை பெய்யாமல் பொய்படுமானால், கடல் சூழ்ந்து அகன்ற உலகமாக இருந்தும், பசியால் உயிர்கள் வாடும் என்பது இதன் உட்பொருள். இக்குறள் மூலம் உப்புக்கரிக்கும் கடல்நீர் விளைச்சலுக்குப் பயன்படாது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். மழை பொய்ப்பின் பசியால் உயிரினங்கள் ஏன் வாடுகின்றன என்பதற்கான காரணத்தை அடுத்த குறளில் விளக்கியுள்ளார். மழை வளம் குன்றிப்போனால் உழவர்களுக்கு வேலையில்லை. அதனால் பயிர் விளைச்சலும் இல்லை. உணவுப் பொருட்களின் உற்பத்தி தடைபடுமானால் பசியால் உலகம் வருந்தும்.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்
மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

காலந்தவறாது மழை பெய்யாவிட்டால் மக்களின் சமுதாய வாழ்க்கை சீர் கெட்டுப் போகும் என்பதைச் சுட்டிக் காட்டுவது இக்குறள். மக்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொள்வதற்கு ஏதாவதொரு வேலை இருக்க வேண்டும். வேலையற்றோர் மட்டுமே நேரத்தை வெறும் எண்ணங்களை மேய்த்துச் செலவிடுகின்றார்கள். தீய எண்ணங்கள் மனதில் தீப்பற்றிக் கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. முன்னேறுவதற்குச் குறுக்கு வழியாகத் தோன்றும் தீயவழி தரும் மயக்கம் மக்களிடையே பரவும்போது சமுதாயமே அறநெறி மீறும் இழிநிலைக்குத் தள்ளப்படுகின்றது. மழை இல்லாது போனால் பலருக்கும் வேலையில்லாது போகும். அது தனி மனிதனைக் கெடுத்து இறுதியில் சமுதாயத்தையே கெடுக்கும். இக்கருத்தைப் பின்தொடரும் ஒரு கருத்து முன்னதிற்கு முற்றும் எதிர்ப்போக்கானது. தீய எண்ணங்களால் கெட்டுப் போனவர்கள் நல்ல சிந்தனை

உள்ளவர்களாக நிலை மாற உறுதுணை புரியும் இந்த மாமழை சமுதாயத்தைக் கட்டிக் காக்க வல்லது. மழையில்லாவிட்டால் நல்லோரும் தீயோராய் மாறுவர் என்றும், மழை பெய்தால் தீயோரும் நல்லோராய் மாறுவர் என்றும் கூறுகின்றார் வள்ளுவர்.

மழையில்லாவிட்டால் நிலத்தில் புல் கூட முளைக்காது என்று மழையின் சிறப்பைக் கூறிய வள்ளுவர், மழையின் அறிவியலைத் தெரிவிக்கின்றார்.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்"

மேகம் உருவாவதற்குக் கடல்நீர் ஆவியாதலே காரணம் என்றும், மழை பொழிவதற்கு மேகம் திரள்வதே காரணம் என்றும் கூறுவது இக்குறள். கடல் வளம் குன்றி அதன் புறப்பரப்பு சுருங்குமானால், ஆவியாதலும் குறைந்து மழையும் குறையும். மழை குறையுமானால் கடலும் தன் வளத்தை இழக்கும். கடல் வளம் என்பது அதிலுள்ள உப்புக்கள், உயிரினங்கள் போன்றவைகளாகும். நிலத்தில் வாழும் உயிரனங்களுக்குப் பயனளித்த தூய மழைநீர், வடிந்து இறுதியில் கடலையே சென்றடைகின்றது. அப்போது நிலத்தில் உள்ள உப்புக்களையும், உலோகங்களையும் அரித்தெடுத்து கடலில் கொண்டு சேர்க்கின்றது. அதனால் கடல் வளம் சிறிதும் குறையாமல் நிலைப்படுகின்றது என்ற கருத்தை இக்குறள் பறைசாற்றுகிறது.

மழை பெய்யத் தவறிவிட்டால், மக்கள் மகிழ்ச்சியையும், பிறர் பொருட்டுச் செய்யும் தானத்தையும், தம் பொருட்டுச் செய்யும் தவத்தையும் விட்டுவிடுவார்கள். மனித இயல்புகளையும் இழப்பார்கள். திருவிழாக்கள் கொண்டாடுவதை மறப்பார்கள். கடவுளைத் தொழ மறுப்பார்கள். இதன் மூலம் மக்கள் மனித நேயத்தைத் தொலைப்பார்கள் என்ற கருத்தை வள்ளுவர் கூறுகின்றார்.

"நீர்இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

'நீரின்றி அமையாது உலகு' என்றசொற்றொடர், உயிரின் பரிணாம வளர்ச்சிப் படியின் முதல் கட்டத்தைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. முதன்முதலில் உயிரினங்கள் நீர் ஊடகத்திலேயே உருவாயின.

இயங்கிச் செல்வதற்கு ஏதுவாக உடலில் உறுப்புகள் ஏதும் இல்லாததால், நீரில் மிதவலாக வாழ்வதற்கு இது அனுகூலமாயிருந்தது. அப்படி உருவாகாது போயிருந்தால் பரிணாம வளர்ச்சியின் அடுத்தடுத்த கட்டங்கள் நிகழாது போயிருக்கும். அதனால் உயர் உயிரினங்களால் நிறைந்த, உயிரியல் சமநிலை பெற்ற உலகு உதிக்காது போயிருக்கும்.

மழை இல்லாது போனால் ஒழுக்கம் கெட்டுப் போகும் என்பதை இவ்வதிகாரத்தில் வரும் சில குறள்களில் சுட்டிக்காட்டிய வள்ளுவர், இக்குறளில் இப்பாதிப்பு எவரையும் விட்டுவைப்பதில்லை என்று தெரிவித்துள்ளார். துறவிகள் கூட விதிவிலக்கல்ல என்பது இவர் முடிவு.

தனக்குத் தேவையான, வேண்டிய ஒன்று தனக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும் வரையில்தான் ஒழுக்கம் நிலைப்படுகின்றது. இந்த நம்பிக்கை பொய்த்துப் போய்விடும் என்ற எண்ணம் துளிர்க்கும்போது, சூரிய ஒளிபட்ட பனித்துளிபோல இருக்குமிடம் தெரியாமல் ஒழுக்கம் ஒழிந்து போய்விடுகின்றது. ஒழுக்கத்தின் மறைவு எப்போதும் ஒழுக்கமின்மையையே பிறப்பிக்கின்றது.

புனைந்து சொல்லப்படும் ஒரு கதை இந்த உறைபொருளை உறுதி செய்கின்றது. ஒரு சமயம் பல துறவிகள் ஒன்று சேர்ந்து ஆன்மிகப் பயணத்தை மேற்கொண்டனர். அவர்களுடைய வழியில் கடிய நிலங்களும், காடுகளும், மலைகளும் குறுக்கிட்டன. கல்லும் முள்ளும் குத்தினாலும் வருத்தம் கொள்ளாது பயணத்தைத் தொடர்ந்தனர். வறட்சி காரணமாக வழியில் நீர்த் தட்டுப்பாடு இருந்ததால் அவர்களுக்குத் தொடர்ந்து சில நாட்களுக்குத் தண்ணீர் கிடைக்காது போனது. தண்ணீருக்காக அவர்கள் நெடுந்தொலைவு கடக்க வேண்டி வந்தது. இனிமேல் ஓரடி கூட எடுத்து வைக்க முடியாத அளவிற்கு எல்லோரும் களைத்துப் போயிருந்தார்கள். அப்போது அருகே கிடந்த ஒரு சிறிய குவளையில் ஒரு வாயளவே குடிநீர் இருப்பதைக் கண்டனர். அதுவரை ஒருவர் பின் ஒருவராகச் சென்றவர்கள், தண்ணீரைக் கண்டவுடன் பாய்ந்து முந்திச் செல்ல முயன்றனர். எல்லோரும் ஒரே சமயத்தில் குவளையைக் கைப்பற்றியதால், குவளை உடைந்து, கிடைத்த கொஞ்ச நீரும் சிந்திப்போனது. கண நேரத்தில் ஒழுக்கம் மறைந்து ஒழுக்கமின்மை பிரகாசமாய் வெளிப்பட்டது.

பாசறைப் புலம்பல்

முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

மன்னனின் போர்த் தொழில் காரணமாகத் தலைவன் தன் தலைவியைப் பிரிந்து செல்கிறான். அங்குப் போய் பாசறை அமைத்துத் தங்குகிறான். சில காலங்களில் விரைவாய்ப் போர் முடிந்து திரும்பிவிடுவான். வேறு சில காலங்களில் போர் முடிவுறாமையால் பாசறையில் தங்கியிருப்பான். இங்ஙனம் போர் முடிவுற்றுத் திரும்புகிற சமயத்திலும், போர் முடிவுறாமையால் பாசறையில் தங்கியிருக்கின்ற சமயத்திலும், தலைவன் தலைவியை நினைத்து நெஞ்சிடம் புலம்புவான். இவ்வகையில் தலைவன் துன்புநிலையில் மட்டும் பதினேழு பாடல்களில் பேசுகிறான். இதனைப் போர்த்தொழில் முடிந்தவிடத்துப் புலம்பல், போர்த்தொழில் முடியாதவிடத்துப் பாசறைப் புலம்பல் என இருவகைப்படுத்தலாம்.

போர்த்தொழில் முடிந்தவிடத்துப் புலம்பல்

தலைவன், தன் வேந்தனின் போர் நிமித்தமாகத் தலைவியைப் பிரிந்து சென்றான். அங்ஙனம் சென்றவிடத்து விரைவில் போர் முடிவுற்றது. ஆதலால் தலைவன் பொருள் தேடித் திரும்புகின்ற விடத்து தன் நெஞ்சிடம் பேசுகிறான். இங்ஙனம் பேசுமிடம் ஒன்றாகும். இதனை, போர் முடிவுற்ற அகநானூற்றுத் தலைவன், தன் நெஞ்சிடம், "நெஞ்சே, நம் தலைவி நம்மைப் பார்த்து, தலைவர் வருவேன் என்று சொல்லிச் சென்ற நாளும் பொய்த்தது. நம் கண்ணீரும் ஓடிக்கொண்டே இருக்கிறது. முல்லைமாலை சூடும் அழகை இழந்த கூந்தலையும் அவர் நினையார் ஆயினர். நமக்கு அவர் செய்யும் அருள் மாறிவிட்டது. அறத்துக்கும் அவர் அஞ்சவில்லை என்று தன் தோழியிடம் சிறியவாகச் சொல்லாடி பெரியவாக வெறுத்து நிற்பாள். ஆயினும், வேந்தன் போரில் பகைவரை வெற்றிகண்டான் என்ற செய்தியை யாரேனும் அவளிடம் உரைப்பாரானால் நம்மிடம் இருந்து வெறுப்பு நீங்கி மகிழ்ச்சி அடைவாள்" (அகநா., 144) எனத் தலைவன் உரைத்தான். இதில்

தலைவனைப் பிரிந்தமையால் தலைவிக்கு ஏற்பட்ட துன்ப உணர்வு எடுத்துரைக்கப் பெற்று, அந்த நிலை சிறிது காலத்திற்குள் மாற்றம் பெற்றுவிடும் என உறுதியளிக்கும் நிலை புலப்படுகிறது.

போர்த்தொழில் முடியாதவிடத்துப் பாசறையில் இருந்து புலம்பல்

தலைவன் வேந்தனின் போர்த்தொழில் காரணமாகச் சென்றான். அங்ஙனம் சென்றவிடத்து போர் இன்னும் முடிவுறாமையால், போர்ப்பாசறை அமைக்கப் பெற்றது. அந்தப் பாசறையில் இருந்து தன் நிலையையும் தலைவியின் நிலையையும் நினைத்து தன் நெஞ்சிடம் புலம்புகின்றான். இதன் தன்மைகளை, "குறித்த பருவம் வந்துவிட்டமை, பாசறையில் இன்னும் வினை முடியாமை, தனது இயற்கைச் சூழல், பூக்கோள் விலக்கிச் செல்லும் தன் விரைவு அறியாத தலைவியின் இயல்பு, கார்காலத்தில் தலைவி என்ன நிலையானாளோ என்ற வருத்தம், மன்னன் நிலை, தனது பொறுப்பு, மாலையில் கோவியர் இசை" என வகைப்படுத்திக் காட்டும் திறம் ஈண்டுக் கருதத்தக்கது. அங்ஙனம் புலம்புமிடம் பதினாறாகும். இதன் சூழல்களை, பருவம் நினைத்துப் புலம்பல், தன்நிலை குறித்துப் புலம்பல், தலைவி நிலை குறித்துப் புலம்பல், இருவர் நிலை குறித்துப் புலம்பல் எனும் சூழ்நிலைகளில் வகைப்படுத்தலாம்.

பருவநிலை குறித்துப் புலம்பல்

தலைவன் வேந்தனுக்குப் போர்க் காலத்து உதவிக்குச் சென்றான். அங்குச் சென்றவிடத்து போர் முடிவுறவில்லை. ஆனால் குறித்த பருவ வரவு வந்தது. அதனைக் கண்ட தலைவன், "நெஞ்சே, இரு பெரும் வேந்தர் பகைத்துக் கொண்டனர். அதனால் பெரும் போர்க்களத்தில் ஒப்பற்ற படையினைக் கொண்டு மாற்றார் படையைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். இதில் செல்வம் உடையவர்க்கு வெற்றி உண்டு எனக் கூறி, தண்ணுமையுடன் கூடி அரசன் அளிக்கும் பூந்தோளினையும் ஏற்றுக்கொண்டேன். நாம் விரைந்து ஊர் திரும்புவதைத் தலைவி அறியாள். அவள், கார்காலத்து மேகம் முழங்குந்தோறும் செயலற்று, ஒடுங்கி, பசலைபூத்த மேனியளாய் எவ்வாறு ஆற்றியிருப்பாளோ! என மொழிந்தான். அதுமட்டுமின்றி மாரிக் காலத்து மாலை நேரத்தில் இல்லறத்திற்கு வரும் கோவலர் குழலிசையும், பெரும் துன்பம் தரும் செவ்வழிப் பண்ணின் ஓசையும் தனித்திருக்கும் தலைவிக்கு என்ன துன்பத்தைக் கொடுக்குமோ ?" (அகநா., 174, 214) எனப் புலம்பலுற்றான்.

ஐங்குறுநூற்றுத் தலைவன் பாசறையில் இருந்து பருவ வரவைக் கண்டு தன் நெஞ்சிடம், "நெஞ்சே, செம்முல்லை பனியால் வளர்கிறது; அதன் அரும்புகள் சிச்சிலிப் பறவையின் வாய்போல் சிவந்தவை; அவை அசைகின்ற சிறகுகளை உடைய வண்டினம் அமர மலர்ந்தன. மேலும், தேனை உண்டு வண்டுகள் பாடுவதற்குக் காரணமாய் அமைந்தன. அது கார்கால நிகழ்ச்சியாதலால் நானும் என் தலைவியின் நெற்றியைக் காண்பதற்கு விருப்பமுடையவன் ஆனேன். ஆதலால், போர்த் தொழிலில் கட்டுண்டு நிற்கும் வேந்தனுடைய உள்ளம் அதிலிருந்து விடுதலை பெற்று நிற்கவேண்டும். (ஐங். 443, 447, 449) என மொழிந்தான்.

பிறிதொரு ஐங்குறுநூற்றுப் பாசறைத் தலைவன், "நெஞ்சே, பாசறையில் போர் முரசு ஒலித்துக் காலைப் பொழுதினை அறிவித்தது. சினம் மிகுந்த வேந்தன் மேற்கொண்ட தொழிலை நிறைவேற்றத் தொடங்கினான். மேகங்கள் மழை பெய்து கார்ப்பருவத்தைத் தொடங்கி வைத்தன. இனித் தலைவியைக் கூடி இன்பம் துய்க்கலாம் என்று அவளை நினைத்து நினைத்து உறக்கம் கொள்ளாது மேற்கொண்ட தொழிலின் மீதும் காதலியின் மீதும் மாறி மாறி மனத்தைச் செலுத்தி நான் மயக்கமுற்றேன். (ஐங் 448) எனப் புலம்பினான். மேலும், என் மயங்குதலைப் போக்கும் வகையில் வேந்தன் தான் மேற்கொண்ட வினையை முடித்து விடுவான் என்றால், என் காமத்துன்பம் நீங்க, தலைவியின் மார்புகளைக் கூடி, நல்ல உறக்கத்தைப் பெறுவேன். (ஐங் 450) அது மட்டுமின்றி, நம் கற்புடைய தலைவி சிறந்த விருந்தைப் பெற்று இன்புறுவாள் எனக் கூறினான். இதனை,

"பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ
இருண்டு தோன்றும் விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்,
குடும்பை மண்ணிப்பூண் புதல்வன் தாயே" (ஐங் 442)

எனும் அடிகள் சுட்டும்.

இவற்றின் வழி, பருவ வரவினால் தலைவிக்கு ஏற்பட்ட துன்பநிலையையும், அவரது நலன்களையும் கூறுகின்ற நிலை புலப்படுகிறது. மேலும் தன் நெஞ்சின் மனத்தடுமாற்றமும் தலைவியைத் தழுவி பெறும் இன்பமும் அவள் விருந்தினரைப் பேணும் சிறப்பும் கூறப்பெற்றுள்ள நிலையை அறியமுடிகிறது.

தலைவி நிலை குறித்துப் புலம்பல்

வேந்தனின் போர்த்தொழில் காரணமாகத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்தான். அங்குச் சென்றஇடத்தில் போர் முடிவுறாமல் நீண்டு கொண்டே சென்றது. அதனால் பாசறையில் இருந்து தன் நெஞ்சிடம் ஓர் அகநானூற்றுத் தலைவன், "நெஞ்சே, வறண்ட காடு கவின்பெற மழை மிகுந்து பொழிந்ததால் வண்டுகள் ஆர்ப்பரிக்கின்றன. வெஞ்சின வேந்தன் போர்த் தொழிலை விடுவானாயின் தலைவன் நிலை என்னாயிற்றோ? என மயங்கி நிற்பாள் நம் தலைவி. அவள் சிந்தும் கண்ணீர்த்துளி காய்ந்து தங்கும் கண்ணோடு வருந்தி இல்லறத்தில் துன்பத்துடன் காணப்படுவாள். ஆதலால், என் இழந்த காதல் நலத்தைப் பெறுவதற்கு இது தக்க காலமாகும்" (அகநா. 164) என மொழிந்தான். இதில் தலைவனைப் பிரிந்தமையால் தலைவி கண்ணீர் சிந்தும் கண்களோடு பொலிவு இழந்து காணப்பெறுவாள் எனும் செய்தி புலனாகிறது.

தன்நிலை குறித்து வருந்துதல்

போர் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் பாசறையில் இருந்து தலைமகளை நினைத்துப் புலம்புகிறான். அப்போது தன் நெஞ்சிடம், "நெஞ்சே, வேந்தன் போர் காரணமாகத் தலைவன் பாசறைக்கண் வினைமேற் கொண்டு வேற்று நாட்டில் தங்கினான். அங்குத் தங்கியவன் தலைவியை நினைத்தமையால் பெருந்துன்பத்திற்கு உள்ளானான். அதனைத் தலைவி அறியாள். அதனால் நமக்கு அருள் செய்யாதவள் பெரிதும் அறம் உடையவர் அல்லர் என்று எம்மை நொந்து வெறுப்பாளோ? யான் அறியேன்" (அகநா. 304) என்று அகநானூற்றுத் தலைவன் ஒருவன் கூறினான். மேலும் பிறிதொரு ஐங்குறுநூற்றுத் தலைவன் தன் நெஞ்சிடம், "புகழ் நிறைந்த சிறப்பினை உடைய காதலியைப் புலம்பும்படி விட்டுவிட்டுப் பாசறைக்கு வந்துவிட்டாய். அருந்தொழிலை உடைய பாசறைக்கண் பெண்ஏற்றைஆண்களை தழுவிச் செல்கிறது. அவற்றின் செயலை நினைத்து நீ வருந்துகின்றாய்" (ஐங் 445) எனத் தலைவன் தன்னை நொந்து மொழிந்தான். இதனால் பாசறைக்கண் இருந்த தலைவன் தன் நிலையை நினைத்து நொந்து வருந்திய நிலை புலனாகிறது.

வேந்தன் போர் காரணமாகப் பிரிந்த பாசறைத் தலைவன், பாசறையில் இருந்து தன்நிலையையும் தலைவி நிலையையும் ஒருசேர நினைத்துப் பார்க்கிறான். இதனை, தன் நெஞ்சிடம் அகநானூற்றுத்தலைவன் ஒருவன், "நெஞ்சே, மழைபெய்யும் கார்காலம் வந்துவிட்டது. இந்தப் பருவத்தில் தலைவியோ, தனியாளாய்த் தன் சிற்றூரிலே தனித்திருக்கிறாள். யாமோ, இரவில் உறக்கம் நீங்கிய சோலையை உடைய வேந்தனது பாசறையே துணையாக இருக்கின்றோம்" (அகநா. 24, 84) எனப் பேசுவதால் உணரலாம்.

மேலும் நற்றிணைத் தலைவன் தன் நெஞ்சிடம், "நெஞ்சே, அங்கோ வெள்ளியாலே செய்யப்பட்ட பாறையை அடித்துச் சிறிது நேரம் விளையாடுவான். அந்த விளையாட்டுப் பிடிக்கவில்லை என்றால் தன் தாயிடம் சென்று பால் பருகுவான். அதன் பின்னர் இங்கும் அங்குமாக அலைந்து சிறு குச்சியைக் கையில் எடுத்துக் கொள்வான். அவன் அருகில் வருவோரை அடிப்பேன் எனப் பயமுறுத்துவான். இடையிடையே சில சொற்களைப் பேசி விளையாடுவான். அவனே என்னுடைய மகன். அவன் தான் என் மனைவிக்குத் துணை. இங்கோ, மன்னர் நாட்டில் போர் முனையிடத்தே, குளிர்ந்த மழை பொழிகிறது. மழைநீர் அருவியாக ஓடுகிறது. பின்பு நடுயாமமும், கூதிர்காலமும் வந்துவிட்டது. யான் என் காதலியைப் பிரிந்து தனியாகப் பாசறையில் இருக்கிறேனே" (நற். 341) எனத் தலைவன் புலம்பினான். ஈண்டு தலைவி இல்லறத்தில் படும் வேதனையும், தலைவன் பாசறையில் படும் துன்பமும் ஒருசேரப் புனையப்பட்டுள்ளது. காரும் போரும் முன்நிற்கையில் பாசறைக்கண் இருந்து தலைவியை நினைத்து புலம்பும் தலைவனின் காதல் மனம் அகத்தில் இடம்பெறுவதனைக் காணவியலுகிறது.

"தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழி"

திரு. தோ.சி.தங்கபாண்டியன்

உலகின் மிக மூத்த மொழிகளாக அறியப்படும் கிரேக்க மொழி, சீனமொழி, இலத்தீன் மொழி, எபிரேயம், சமஸ்கிருதம், ஹீப்ரு ஆகிய மொழிகளில் தமிழும் முதன்மையான இடம் பெற்றுத் திகழ்வதனை மொழி அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். விடுதலைக் கவிஞர் பாரதியாரும், "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத் தொழுது படித்திடடி பாப்பா" (ப.249) எனப் பாடியுள்ளார். தமிழின் செம்மாந்த தன்மைகளை இலாஹோவரி, கால்டுவெல், ஹல்பர்ட், பரிதிமாற்கலைஞர், பொற்கோ, நா.மகாலிங்கம், க.ப.அறவாணன், பாவாணர், தனி நாயகம், அகஸ்திய லிங்கம் போன்றோர் விரிவாகப் பல நூல்களில் கூறியுள்ளனர். குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சிலர் தமிழைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். பல சான்றுகளால் தமிழ் உயர் தனிச் செம்மொழியாவதை நிறுவலாம்.

செம்மொழித் தகுதிகள் :

தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, பலமொழிகளுக்குத் தாயாகி நிற்றல், இனத்தின் பண்பாடு மற்றும் நாகரிகத்தின் வெளிப்பாடாகத் திகழ்தல், பிறமொழி உதவியின்றி தனித்து இயங்கும் ஆற்றல், இலக்கிய, இலக்கண வளம், மொழிக் கொள்கை ஆகியன ஒருமொழியைச் செம்மொழி என அறிய உதவும் தகுதிகளாக அறிஞர் பலர் கூறுவர். இவையும் இவற்றுக்கு மேலும் பல உயர்ந்த தகுதிகளைத் தமிழும் தமிழரும் பெற்றிருப்பதை அறியலாம்.

தமிழின் பழமை :

ஆரியர் வருகைக்கு முன் அதாவது கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பேச்சும் எழுத்தும் கொண்டு தனித்தியங்க வல்ல மொழியாகத் தமிழ் விளங்கியமைக்குத் தக்க தொல்லியல் சான்றுகள் உள்ளன. 'ஆரியர் வருகைக்கு முன் இந்தியாவில், வட இந்தியாவில் வழங்கிய மொழி தமிழ் என்பதில் எனக்குச் சிறிது கூட சந்தேகமில்லை' என எம்.டி.பண்டார்க்கர் கூறுவதாகவும்,

தற்கால இந்தியா முழுமையும் வழங்கிய மொழி தமிழ் : சமஸ்கிருத, பிராகிருத சம்பந்தமான மொழிகள் வழங்கவில்லை. இவ்வுண்மையை பி.தி.சீனிவாச ஐயங்கார், "இந்தியாவின் கற்காலம்" என்னும் நூலில் விளக்கியுள்ளார் எனவும், ந.சி.கந்தையா என்னும் தமிழறிஞர் கூறுவது தமிழின் பழமையை உணர்த்துவதாக உள்ளது (பக் 20-21).

"கி.மு. 50,000 ஆண்டுகள் ஒட்டிச் செம்மையான தமிழ் இருந்து வந்திருக்கிறது" (பக்.11, தமிழும் மொழிகளும்) 'உலகில் உள்ள மொழிகள் 2700 ஆகும். இவற்றில் இலக்கண இலக்கியம் கொண்டவை 700 மொழிகளுக்கு மேல் தேறாது. சொந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி என்றால் எண்ணிக்கை 500க்கு கீழ் வந்துவிடும். இந்நிலையில் தொன்மையான மொழி என்ற வகையில் தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம் என்ற ஐந்து மொழிகளைச் சொல்வர். வேறு சிலரோ ஹீப்ரு மொழியைச் சேர்ந்து 6 மொழி என்பர். ஆனால் இவற்றில் சமஸ்கிருதத்திற்கு இன்றளவும் எழுத்தில்லை. எழுத்தில்லாத மொழி எங்ஙனம் இலக்கியம் படைக்கும்? எங்ஙனம் இலக்கணம் உருவாக்கும்?" எனவே என்றுமே பேசப்படவில்லை என்பதால் முதன்மைப் போட்டிக்குத் தகுதியற்றதாகிவிடுகிறது. சீனமொழி எழுத்துக்காலத்திலேயே நின்றுவிட்டது. இலத்தீன், கிரேக்கம், ஹிப்ரு ஆகிய மூன்று மொழிகளும் பேச்சு வழக்கிலிருந்து வீழ்ந்து விட்டன. இந்நிலையில் தொன்மைப் போட்டிக்கு மிக வன்மையுடன் நிற்பது தமிழ் மொழி மட்டுமே யாகும்" (ப 33 தமிழும் உலக மொழிகளும்) என சாத்தூர் சேகரன் அவர்கள் குறிப்பிடுவது ஈண்டு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

மேலும் அவர், "நாம் கேள்விப்பட்ட தமிழின் வயது 5000-3000 ஆண்டுகள். ஆனால் உண்மைத் தமிழின் வயது இலட்சம் ஆண்டுகளாகும் என்பதால் , ஆயிரக்கணக்கான மொழிகள் உலகில் தோன்றும் முன்பே தமிழ் பேச்சும் எழுத்தும் கொண்ட செம்மையான மொழியாக இருந்துள்ளமை அறியலாகும்.

தமிழின் உலகளாவிய சிறப்பும் நிலைப்பும் :

உலகின் பல்வேறு நாடுகளின் ஊர்ப் பெயர்களும், மக்கட் பெயர்களும், பேச்சு மொழிப் பெயர்களும், வினையடிச் சொற்களும் தமிழின் தொன்மையான வடிவங்களாக உள்ளன. சில அப்படியே வழங்குகின்றன. சில சிதைந்து வழங்குகின்றன என்பதைப் பல சான்றுகளால் மானுடவியல் அறிஞர்களும், மொழி அறிஞர்களும் உறுதிப்படுத்துகின்றனர். உலகின் அனைத்து நாகரிகங்களும் தமிழ் மொழியுடனும், தமிழ்ப் பண்பாட்டு மூலங்களுடனும், மிக நெருங்கிய தொடர்பினைப் பெற்றுள்ளன. அனைத்து நாகரிகங்களும் (கடல் கொண்ட) குமரிக்கண்ட நாகரிகத்துக்குப் பிந்தியவை என்று சாத்தூர் சேகரன் குறிப்பிடுகின்றார்.

ஆஸ்திரேலியா, ஆசியா, ஆப்ரிக்கா, மத்திய தரைக்கடல் நாடுகள், அரேபியா முதலிய நாடுகளின் மக்கள் யாவரும் குமரிக்கண்ட திராவிட மக்களின் வாரிசுகளே! இதனாலேயே கணியன் பூங்குன்றனார் தம் புறநானூற்றுப் பாடலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் போலும்!

பிறமொழிகளில் தமிழின் செல்வாக்கு :

இன்றைய உலக மொழிகள் பலவற்றில், குறிப்பாகச் சீன மொழியில், நீ என்பது அப்படியே நீ என்றும், தாம் என்பது தாமன் என்றும், தாய் என்பது தாயி எனவும், ஜப்பான் மொழியில் அணை என்பது அன எனவும், தழை என்பது தரு எனவும், கூவல் என்பது கூபொ எனவும், இராக் மொழியில் தமிழின் யாமம் – யோம் எனவும், நாள் என்பது நஹார் எனவும், அரபு மொழியில் தமிழின் அம்மா – உம்ம எனவும், அப்பா ஆபி எனவும், கூழ் – கூட் எனவும், மலாய் மொழியில் தமிழின் முதியவன் முதுவ எனவும், பகல் – பகி எனவும், பூ – பூங்க எனவும், கப்பல் – கெப்பல் எனவும் வழங்குகின்றன.

ஹீப்ரு மொழியில் தமிழின் ஊர் என்பது அப்படியே ஊர் எனவும், இரு என்பது இர் எனவும், அப்பா என்பது அபா எனவும், அம்மா என்பது – எம்மா எனவும், இன்னும் பாரசீக மொழியில் அப்பு (தண்ணீர்) – அப் எனவும், அடுப்பு – அடெப் எனவும், ஆறு – அர்ரெ எனவும், அங்கு என்பது அஞ்ச எனவும், வழங்கப்படுவதாகவும் இதுமட்டுமில்லாமல் திபெத்தியன், நேப்பாளி, உருது, கிரேக்கம், லத்தீன், வங்க மொழி முதலியவற்றில் தமிழ்ச் சொற்கள் சற்றுத் திரிந்த நிலையில் உள்ளன" என்பதைச் சாத்தூர் சேகரன் தம் தமிழும் உலக மொழிகளும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (பக். 15–25).

லாகோவரி என்னும் மொழியறிஞர் 700க்கும் மேற்பட்ட சான்றுகளைக் காட்டி உலக மொழிகளில் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலந்து வழங்குவதைக் காட்டுகின்றார்.

– அடுத்த இதழில் தொடரும்–

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தனம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.

தொடர்பு முகவரி :

ஆசிரியர், செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–625001.

தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 April 2009

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by Davam Printers, published by **R.ALAGUMALAI** M.A.,M.Phil., on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **32, West masi Street, Madurai-1,** and published at **54, Tamilsangam road, Madurai.** Editor **R.ALAGUMALAI** M.A.,M.Phil.,